(இ) அவர்களில் வேலை வாய்ப்பு நிறுவனத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக எத்தனை ஆசிரியர்களுடைய பெயர்கள் நடப்புப் பதிவேட்டில் இன்னும் இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 29,783.

(இ) 8,241.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, வகுப்பு அறைகளில் 60, 70 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலைமை இருந்து வருகிறது. அதனால் மாணவர்களுக்கும் தக்க கவனம் கிடைப்பதில்லை, ஆசிரியர்களுக்கும் கடினமாக இருக்கிறது. அந்த மாணவர் எண்ணிக்கையைக் குறைத்தால் மேலும் பல ஆசிரியர்களை வேலைக்கு அமர்த்த முடியும். அதனால் வேலை வாய்ப்பும் அதிகரிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, மாணவர், ஆசிரியர் விகிதாசாரம் பல்வேறு பிரச்னைகளில் ஆராயப்பட வேண்டிய விஷயம். இது கல்வித் துறையால் கவனிக்கப்பட வேண்டியது.

THIRU M. RAJAH IYER : Sir, may I know whether these trained teachers who are on the rolls of the Employment Exchanges are being deputed to the various agencies for employment only in the order in which they have been enrolled, and whether any complaints have been received by the Government that candidates who enrolled themselves much earlier are not sent ?

MR. CHAIRMAN : The Hon. Minister said that this matter purely related to the Hon. the Education Minister.

THIRU M. RAJAH IYER : I refer to the Employment Exchanges. May I know whether there is any policy in the Employment Exchanges that candidates who got themselves enrolled should be deputed in the order in which they have been enrolled and those who enrolled themselves much later do not get any advantage over others waiting for such a long time?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தவேலை தேடித் தரும் அலுவலகங்களின் மீது பரவலாகப் பல குற்றச்சாட்டுகள் இருந்து வருகின்றன. எல்லா மாவட்டங்களிலும் இந்த அலுவலகங்களில் சென்று பதிவு செய்து கொண்டு வருகிறவர்கள் ஏதாவது ஒரு புகாரைச் சொல்லிக் கொண்டு தான் வருகிறார்கள். அவர்களும் தொழிலுக்கு ஏற்றவர்களைப் பொறுக்கி எடுத்து அனுப்புவதில் பல சங்கடங்களை ஏற்க நேரிடுகிறது. கல்வித் துறையைப் பொறுத்த வரையில், அரசாங்கம் இந்த ஆண்டு வரையில் உள்ளவர்

1972 ஆகஸ்டு 9]

களுக்குக் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்து நடத்தி வருகிறது. 1970-ஆம் ஆண்டுக்கு முன்னால் உள்ளவர்கள் வரையில் என்று குறிப்பிட்டு விதி போடப்படுகிறது. எல்லா வேலை வாய்ப்பு அலுவலகங்களைப் பற்றியும் கூறப் பட்டு வரும் புகார் நபர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புவதைக் குறித்துத்தான். ஒருமுறை பதிவு செய்துவிட்டு அந்தக் காலக் கெடு முடிந்தபிறகு மறுபடியும் வந்து புதுப்பித்துக்கொள்ளத் தவறி அதன் பின்னால் அந்தால் அவர்கள் பெயர்கள் கீழே போடப்படும் நிலைமை இருந்து வருகிறது. பல குறைகள் இருக்கின்றன. அவற்றை எப்படிப் போக்கலாம் என்பது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. நாங்களும் உணருகிறோம். இந்தத் தொழில் வேலை வாய்ப்பு அலுவலகங்களைப் பொறுத்த வரையில், பரிசீலனையில் இருப்பது ஒவ்வொரு ஆண்டும், பட்டியலில் உள்ளவர்கள் பெயர்களை அப்படியே ஒவ்வொரு அலுவலகத்திற்கும் அனுப்பி விடுவது, அதற்குப் பின்னால் அடிஷன், டெலிஷன் இவற்றை மட்டும் அனுப்பினால் போதும். அப்படிச் செய்தால் பொறுப்பு இந்த அலுவலகத்தின் மேல் ஏற்படாது. கல்வித் துறையில் இருப்பதுபோல் இங்கும் ஏற்படுத்தலாம் என்பது பரிசீலனையிலிருந்து வருகிறது.

THIRU D. SANTOSHAM : Mr. Chairman, Sir, will the Hon. the Minister for Industries dealing with unemployment among teachers recommend to the Education Department the reduction and strict enforcement of the teacher-pupil ratio at 1 : 35?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அதைப் போக்கவே, கல்வித் துறையில் பலவிதமாகப் பரிசீலிக்கப்பட்டு, இந்த ஆண்டு பயிற்சிப் பள்ளிகளில் சேர்க்கும் மாணவர்கள் எண்ணிக்கையைக் குறைப்பது என்ற முடிவை எடுத்திருக்கிறது. நம்முடைய நாட்டில் அரசாங்கம் எந்த முடிவை எடுத்தாலும் எதிர்க்கும் துர்ப்பாக்கிய நிலைமை இருக்கிறது. இப்பொழுது அதிக ஆசிரியர்கள் வேலை இல்லாமல் இருக்கிற காரணத்தால், பயிற்சிப் பள்ளி மாணவர்கள் எண்ணிக்கையைக் குறைப்பது என்ற அரசாங்க முடிவு அரசியலாக மாற்றப்படுகின்ற காரணத்தால், இதுபோன்ற திட்டங்களை நிறைவேற்றும் முயற்சியில் குறைபாடுகள் ஏற்படுகின்றன. இது விஷயத்தில் கல்வித் துறை ஆழ்ந்த கவனம் செலுத்தி வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

* 14 Q.—THIRU V. ISVARMURTI and THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of (i) Medical Graduates (ii) Science Graduates and (iii) Diploma Holders in Engineering who are on the Live Register of the Employment Exchanges in the State for more than one year as on date?

திரு .வ. ஈஸ்வரமூர்த்தி &

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

ஓராண்டுக்கும் மேலாக மாநில வேலை வாய்ப்பகத்தின் வேலைபெருதவர் பதிவேட்டில் பதிவு செய்துள்ள

1. மருத்துவப் பட்டதாரிகள்,

2. அறிவியல் பட்டதாரிகள்,

3. பொறியியலில் தகுதிப்பட்டயம் (D ploma) பெற்றவர்கள் ஆகியோரது எண்ணிக்கை இன்றுவரை என்ன ?

மாண்புமிகு திரு. சே. மாதவன் :

22—2—1972 அன்றுள்ள நிலைமைப்படி இம்மாநிலத்திலுள்ள வேலை தேடித் தரும் நிறுவனங்களின் நடப்புப் பதிவேட்டில் கடந்த ஓராண்டுக்கும் மேலாக இருந்து வருகின்ற பட்டதாரிகள், பட்டயத் தகுதி பெற்றவர்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு :

(அ) மருத்துவப் பட்டதாரிகள்	25
(இ) அறிவியல் பட்டதாரிகள்	5257
(உ) பொறியியலில் பட்டயத் தகுதி பெற்றவர்கள்.	2223

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சயன்ஸ் கிராஜுவேட்சைப் பற்றிக் கேட்டதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆர்ட்ஸ் கிராஜுவேட்சைப் பற்றித் தனியாக இல்லை.

*15. Q.—Thiru V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of candidates registered in the Employment Exchanges in Madras City during 1971 month-wise; and

(b) the registration made per day on an average by these offices?

வேலை வாய்ப்பு அலுவலகங்கள்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1971 ஆம் ஆண்டில் சென்னை மாநகரிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகத்தில், திங்கள் வாரியாக, பதிவு செய்துள்ளோரின் எண்ணிக்கை யாது?